வென்ற்வேத்வில் தமிழ்க்கல்வி நிலையம்

WENTWORTHVILLE

TAMIL STUDY CENTRE

# தமிழ் அறிவுப் போட்டி 2017

# ஆண்டு 6

# மாதிரி வினாக்கள்

1. “காற்றுள்ள போதே தூற்றிக்கொள்”

என்பது ………..

1. பழமொழி
2. திருக்குறள்
3. புதுமொழி

**<u>விடை:</u>**

1. பழமொழி

2. தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்று

1. கபடி

2. கிட்டியடித்தல்

3. ஜல்லிக்கட்டு

**<u>விடை:</u>**

3. ஜல்லிக்கட்டு

3. நான்கு திசைகளையும் கூறுக?

**விடை:**

# வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு

4. ஆறுமுக நாவலர் எங்கே பிறந்தார்?

1. கும்பகோணம்

2. திருச்சி

3. யாழ்ப்பாணம்

**<u>விடை:</u>**

3. யாழ்ப்பாணம்

5. “கங்கை கொண்ட சோழன்” என்று அழைக்கப்பட்ட மன்னன் யார்?

1. ராஜேந்திரன்

2. எல்லாளன்

3. ராஜராஜன்

**<u>விடை:</u>**

1. **ராஜேந்திரன்**

6. 1930ஆம் ஆண்டு பௌதிகத்திற்கான நோபல் பரிசு பெற்ற தமிழர் யார் ?

1. சீனிவாச இராமானுஜன்
2. சந்திரசேகர் வெங்கட இராமன்
3. வெங்கடராமன் இராமகிருஷ்ணன்

**<u>விடை:</u>**

**2. சந்திரசேகர் வெங்கட இராமன்**

7. நீரிலும் நிலத்திலும் வாழும் ஒரு உயிரினம் எது?

1. தவளை
2. மீன்
3. சிங்கம்

**விடை:**

1. தவளை

8. ஆதிவாசிகள் அவுஸ்திரேலியாவில் பெருமளவில் வாழும் பிரதேசம் எது ?

1. மேற்கு அவுஸ்திரேலியா
2. வட அவுஸ்திரேலியா
3. தென் அவுஸ்திரேலியா

**<u>விடை:</u>**

2. வட அவுஸ்திரேலியா

9. பாடல்களை இயற்றுபவர்?

1. பாடகர்

2. கவிஞர்

3. நடிகர்

**<u>விடை:</u>**

2. கவிஞர்

10. இளவேனிற் காலம் என்பது ?

1. கோடைக்காலம்

2. வசந்த காலம்

3. இலையுதிர் காலம்

**<u>விடை:</u>**

**2. வசந்த காலம்**

11. “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

ஆலயம் தொழுவது சாலவும் நன்று”

என்ற பாடலை இயற்றியவர்?

1. திருவள்ளுவர்
2. ஔவையார்
3. பாரதியார்

**<u>விடை:</u>**

2. ஔவையார்

12. பூமி என்பதற்கு ஒத்த கருத்துள்ள சொல்?

1. வானம்

2. வையகம்

3. பூ

**<u>விடை:</u>**

2. வையகம்

13. திருக்குறளை இயற்றியவர் யார்?

**<u>விடை:</u>**

# திருவள்ளுவர்

14. தமிழில் எத்தனை எழுத்துக்கள் உள்ளன?

**<u>விடை:</u>**

**247 (இருநூற்றி நாற்பத்தி ஏழு)**

15. ஒரு வருடத்தில் எத்தனை மாதங்கள் உள்ளது?

**விடை:**

**பன்னிரண்டு (12)**

16. வென்ற்வேத்வில் தமிழ் கல்வி நிலையம் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?

1. 1984
2. 1988
3. 1979

**<u>விடை:</u>**

2. 1988

17. பின்வரும் வசனத்தை முடிக்கவும்.

அவன் நேற்றுக் கடைக்கு ________________

**விடை:**

**சென்றான்**

**(போனான் / போகவில்லை / ...)**

18. தமிழை ஆட்சி மொழியாகப் பயன்படுத்தும் நாடுகளில் ஒன்று?

1. சிங்கப்பூர்

2. அவுஸ்திரேலியா

3. மலேசியா

**விடை:**

1. சிங்கப்பூர்

19. தபால் என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது?

1. கஞ்சல்

2. அஞ்சல்

3. வள்ளல்

**<u>விடை:</u>**

2. அஞ்சல்

20. தமிழரின் வீரத்தைக் கூறும் இலக்கியம்

1. ஆத்திசூடி

2. அகநானூறு

3. புறநானூறு

**<u>விடை:</u>**

3. புறநானூறு

21. ‘அவை’ என்ற சொல்லின் ஒருமை வடிவம் எது?

**விடை:**

அது

22. தமிழர் பண்பாடுகள் இரண்டினைக் கூறுக?

**<u>விடை:</u>**

**தாய் தந்தையரைப் பேணுதல்**

**வந்தாரை வரவேற்று விருந்தோம்புதல்**

**(பிறருக்கு உதவுதல்**

**பெற்றோர், பெரியோர், ஆசிரியர்களை மதித்தல்)**

23. தமிழ்க் கலைகள் இரண்டைக் கூறுக?

**விடை:**

**நாட்டியம்,  கோலாட்டம்**

**(மயிலாட்டம்  /  நாடகம்  /  பேச்சு  / …..)**

24. புலம் பெயர் தமிழர்கள் தமது கலாசாரத்தையும் பண்பாட்டையும் கட்டிக் காத்து வரும் இரண்டு முறைகளைக் கூறுக?

**விடை:**

கலை கலாசார நிகழ்வுகள்

ஆலயங்கள்

(தமிழ்ப் பாடசாலைகள், தமிழ்க் கலைகளைக் குழந்தைகளுக்குக் கற்பித்தல்)

25. இந்த இசைக் கருவியின் பெயர் என்ன?



**<u>விடை:</u>**

**பறை**